OS No. 66/2015

நாள் 16.03.2026

DW3 . திரு. முனியாண்டி த/பெ. கிருஷ்ணசாமி

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் பத்திர எழுத்தராக வேலை பார்க்கிறேன். 30 வருடங்களாக பத்திரம் எழுதுகிறேன். எனது ஊர் இராட்டினமங்களம் ஆகும். பத்திரம் எழுதுவதற்கு உரிமம் எண்.A1193/93 ஆகும். பொதுவாக நான் ஆவணங்களை எழுதும்போது அதன் உண்மை தன்மைகளை தெரிந்துக்கொண்டுதான் ஆவணம் எழுதுவேன் என்றால் சரிதான். பொய்யான ஆவணங்களை எழுதி பதிவு செய்யும் வழக்கம் எனக்கு இல்லை.

2. சார்பதிவாளர் ஆவணம் பதிவு செய்வதற்கு முன்பாக ஆவணத்தின் தரப்பினர்களை விசாரணை செய்துதான் பதிவு செய்வார் என்றால் சரிதான். ஆவணம் எழுதியவர் என்ற இடத்தில் நான் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். எந்த ஒரு ஆவணத்திலும் நான் கையொப்பம் செய்யாமல் ஆவணத்தை எழுதுவதில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 அடமான பத்திரத்தை நான்தான் எழுதினேன். கண்ணன் என்பவர் வாதி சிவகாமிக்கும் அந்த பத்திரத்தை எழுதிக்கொடுத்துள்ளார். ரூ.60,000/-த்தை வாதியிடம் குடும்ப செலவுகளை பைசல் செய்வதற்காக கண்ணன் கடனாக வாங்கிக்கொண்டு அந்த பத்திரத்தை எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மாதம் 1க்கு ரூ.100க்கு வட்டி ரூ.2 வருடாவருடம் செலுத்துவதாக விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. சார்பதிவாளர் வா.சா.ஆ.1 ஆவணத்தை பதிவு செய்வதற்கு முன்பாக தரப்பினர்களை விசாரித்திருப்பார் என்றால் அது என்னால் சொல்லமுடியாது. ஆனால் அதுதான் நடைமுறை. என்னுடைய பிரமான வாக்குமூலத்தில் பத்தி எண்.4ல் கூறியிருக்கும் 03.05.2003 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தை நான் எழுதவில்லை. எனது பிரமான வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் சொல்லி தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை. வழக்கறிஞர் சொல்லிதயார் செய்யப்பட்டது. அதில் உள்ள விவரங்களை படித்து பார்த்து அதில் உள்ளபடி சாட்சியம் அளிக்க வழக்கறிஞர் சொன்னார். பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால், ஆமாம், தெரியாது. மேற்படி இரண்டு ஆவணங்களை குறித்து பிரமான வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் பொய்யானதா என்றால் நான் சொல்லவில்லை. பி.வா.சா.ஆ.3 ஒப்பந்த முச்சலிக்கா எழுதியதாக பிரமான வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா,ஆ.3 ஆவணத்தில் என்னுடைய கையொப்பம் இருக்கிறதா என்றால், என்னுடைய கையொப்பம் இல்லை, ஆனால் நான்தான் எழுதினேன். வா.சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்தும். பி.வா.சா.ஆ.3 ல் உள்ள கையெழுத்தும் வேறுபாடாக உள்ளது என்றால்

இல்லை ஒரே மாதிரிதான் உள்ளது. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை என்னுடைய கையொப்பம் இல்லை என்றாலும், அந்த ஆவணத்தை நான் எழுதவில்லை என்றாலும், பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை எழுதும்போது யார் யார் இருந்தார்கள் என்று சொல்லமுடியுமா என்றால் என்னால் சொல்லமுடியாது.

5. வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதும்போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால், அண்ணாமலை மற்றும் வேலு மற்றும் பெயர் தெரியாத ஒருவர் இருந்தார். வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணத்திலுள்ள சாட்சிகள் வேறு வேறு நபர்கள் என்றால் ஆமாம். ஒரேதேதியில் எழுதப்பட்டதாக சொல்லப்படும் வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணத்திலுள்ள சாட்சிகள் வேறு வேறு நபர்களாக இருப்பதற்கு என்ன காரணம் என்றால் காரணம் சொல்லமுடியாது. வட்டி பணம் போடாமல் அடமானப்பத்திரம் எழுதமுடியும் என்றால் எழுதமுடியாது. வட்டி குறித்து எழுதாமல் அடமான ஆவணம் எழுதலாம் என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு சாட்சியம் அளிப்பதற்காக அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். என்னை 4ம் பிரதிவாதியும், வழக்கறிஞரும் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன்.

6. என்னுடைய பிரமான வாக்குமூலத்தில் வாதியின் கணவர் போலீஸ் என்பதால் வற்புறுத்தி வா.சா.ஆ.1 எழுதப்பட்டதாக சொல்லியிருப்பது சரியா என்றால் நான் அதுபோன்று சொல்லவில்லை. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை நான் எழுதவில்லை என்றாலும், அந்த ஆவணம் எழுதும்போது வாதி அங்கு இல்லை என்றாலும், பிரதிவாதிகளால் போர்ஜரியாக எழுதப்பட்டது என்றாலும் சரியல்ல. ஒப்பந்தம் முச்சலிக்கா குறித்து வா.சா.ஆ.1 ல் விவரம் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஐ பதிவு செய்யமுடியும் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு விவரங்கள் தெரியாமல் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.